# மூன்றாம் தவணைப் பரீட்சை – 2024

| 33 | T | I I |
|---|---|---|

| தரம் - 10 | | புள்ளி |
|---|---|---|
| ඉතිහාසය - 11<br>வரலாறு - 11<br>History - 11 | INDEX NO: ................................. GRADE: ............ | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three house |

| | |
|---|---|
| මතර කියවීම කාලය - මිනිත්තු 10යි<br>மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள<br>Additional Reading Time - 10 Minutes | வினாத்தாளை வாசித்து, விளாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்தும் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக. |

அறிவுறுத்தல்கள்:

- ❖ பகுதி I இல் வினா இலக்கம்-1 கட்டாயமானது.
- ❖ பகுதி II இலிருந்து நான்கு (04) வினாக்களுக்கும்
- ❖ பகுதி III இலிருந்து ஒரு (01) வினாவுக்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக ஆறு (06) வினாக்களுக்கு விடை எழுதுக

## பகுதி – I

(அ) (1).**கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப் பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.**

- கோணநதி, பதவியாகுளம், சல்வாத்தோட்ட, தீகவாபி, கனகராயன் ஆறு, சீகிரிய, ஆனையிறவு, திருக்கேதீஸ்வரம், சூரகத்தித்த, லங்காபட்டுண, ஹல்துமுல்ல, கொடவாய

*(12 புள்ளிகள்)*

(11).**கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.**

- ஜப்பான், மும்பாய், புளோரன்ஸ், பிலிப்பைன்ஸ் தீவுகள், மத்தியதரைக்கடல், லிஸ்பன்

*(06 புள்ளிகள்)*

**(ஆ)** (1).**கீழே A,B,C,D ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புடைய விடைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.**

A - சிலுவை அடையாளத்துடன் கூடிய கற்றூண் கண்டுபிடிக்கப்பட்ட இடம்
B - சமூக அமைப்பில் கூலிக்கு பெறக்கூடிய அடிமைகள் அழைக்கப்பட்ட விதம்
C - கி.பி 1283ல் எகிப்துக்கு தூதக் குழுவினரை அனுப்பிய மன்னன்
D - கம்பளைக் காலத்தில் ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் கோட்டை அமைத்தவன்

*(04 புள்ளிகள்)*

**(11) A, B ஆகிய உருக்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.** **(A)**



1. உரு A ல் காட்டப்படுவது யாது?
2. இது எத்துறையுடன் தொடர்புடையது?
3. இது எந்த அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?
4. இது எத்தேவைக்காக பயன்படுத்தப்பட்டது?

(04 புள்ளிகள்)

(111) 1. உரு B ல் காட்டப்படும் நபர் யார்? **(B)**

2. இவர் ஆட்சி செய்த இராசதானி எது?

3. இவரது இளமைப் பெயர் யாது?

4. இவரது இப்படத்தினை வரைந்தவர் யார்?



**(04 புள்ளிகள்)**

## பகுதி – II

**1.** (i) கோட்டை முதல் கண்டி இராச்சிய காலத்தில் எழுந்த போர்க்காவியங்கள் இரண்டையும், புகழ்காவியம் ஒன்றையும் குறிப்பிடுக?

(ii) a - இலங்கையின் புத்தசாசன வளர்ச்சி பற்றி எழுதப்பட்ட நூல்
b - பொலநறுவைக்காலத்தில பயன்படுத்தப்பட்ட செப்பு நாணயம்
c - இலங்கைக்கு வருகை தராது இலங்கை பற்றி குறிப்பிட்ட சீன தேசசஞ்சாரி
d - குதிரைத் தலையும், மனிதனும் சிற்பம் காணப்படும் விகாரை

(iii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களது உணவு முறைகளை அவர்களது சூழலியல் வலயங்களே தீர்மானித்தன. இரண்டு விடயங்களின் துணையுடன் எடுத்துக்காட்டுக?

(iv) தொல்பொருள் மூலாதாரங்கள் தற்காலத்தில் அழிவடைவதற்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக

***(3+4+5+6=18 புள்ளிகள்)***

**2.** (i) இலங்கையில் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்ததாகக் கருதப்படும்

a – தாழ்நில ஈரவலயக் கற்கைகள் இரண்டினையும்,
b – மலையக வெட்டவெளிகள் இரண்டினையும், குறிப்பிடுக?

(iii) முன்வரலாற்றுக்கால மக்களது வாழ்க்கையில் காணப்பட்ட தொழிநுட்ப முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக?

(iv) வரலாற்றுக்கால மக்களின் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

***(3+4+5+6=18 புள்ளிகள்)***

**3.** (i) பின்வரும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பதவிப் பெயர்களை **A,B,C** என்ற ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

a - உணவுச்சாலை அதிகாரி
b - பொருளாளர்
c - நகர பரிபாலகர்

(ii) ஆரம்ப கால மன்னர்கள் மக்களின் முன் தோற்றம் தரவிரும்பிய பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. அப்பெயர்களைப் பயன்படுத்திய மன்னர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

a - மின்னேரியா தெய்வம்
b - நரேஸ்வரன்
c - அலகபாய மகாராஜா
d - காலிங்க சக்கரவர்த்திப் பெருமாள்

(iii) புராதன எமது இலங்கையில் அரசுரிமையானது கைமாறப்பட்ட விதங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் விளக்குக?

(iv) நாட்டின் மன்னன் என்ற வகையில் அரசனுக்குரிய கடமைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

**(3+4+5+6=18 புள்ளிகள்)**

4. (i) பின்வரும் சுகாதார சேவைகளை வழங்கிய எமது புராதன மன்னர்களை குறிப்பிடுக?

a - பத்து கிராமங்களுக்கு ஒரு வைத்தியரை நியமித்தமை

b - பசவந்தி நாமசாலா என்னும் பிரசவ விடுதியை அமைத்தமை

c - உபசக்க ரோகநாச என்னும் தனியான வைத்தியசாலையை அமைத்தமை

(ii) தேவநம்பியதீச மன்னனின் பின் ஆட்சிக்கு வந்த அவனது சகோதரர்கள் நால்வரைக் குறிப்பிடுக?

(iii) எமது பண்டைய சமூகத்தில் பொருளாதாரம் வர்த்தகத்தின் மூலம் ஒழுங்கமைந்து காணப்பட்டதனை இரண்டு விடயங்களின் துணையுடன் எடுத்தக்காட்டுக?

(iv) எமது நாட்டின் ஆரம்ப காலத்தில் பல்லின சமூக மக்களும் வாழ்ந்தாலும் அவர்களுக்கிடையே எந்த முரண்பாடுகளுமின்றி இணக்கப்பாட்டுடன் வாழ்ந்துள்ளனர். என்பதனை மூன்று ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுக?

**(3+4+5+6=18 புள்ளிகள்)**

5. (i) பின்வரும் சொற்கள் குறிபிபபிடுவது விடயங்களைத் தருக.

a – வதால

b – சபாவ

c – தண்டநாயக்க

(ii) புராதன காலத்தில் பின்வரும் விடயங்களுடன் தொடர்படைய கல்வெட்டுக்களை அடைப்புக்குளிருந்து தெரிவு செய்து எழுதுக.

a - நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் வருமானம் அப்பகுதிக்குரிய விகாரைக்கு வழங்கப்படும்

b - உரிய காலத்தில் உழவு செய்ய தவறும் நபர்களுக்கு ஐந்து கலங் அபராதம் செலுத்த வேண்டும்

c - எருமை, பசு, ஆடு என்பவற்றை கொல்வோருக்கு மரண தண்டணை வழங்க வேண்டும்

d - குளத்திலிருந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர பாசிப்பயறு விதைத்தலாகாது.

(மிகிந்தலை சுவர்க் கல்வெட்டு, தோணிக்கல கல்வெட்டு, சித்துல்பவ்வ கல்வெட்டு, வெஸ்ஸகிரி கல்வெட்டு, கொண்ட வட்டவான் தூண் கல்வெட்டு)

(iii) புராதன கால இலங்கையில் பெண்கள் சுதந்திரமாகச் செயற்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக?

(iv) புராதன சமூக அமைப்பிலிருந்து இன்றைய சமூகம் பெறக் கூடியமுன்மாதிரிகள் 03 அனைக் குறிப்பிட்டு விபரிக்குக?

**(3+4+5+6=18 புள்ளிகள்)**

6. (1) பின்வருவனவற்றிற்கு சுருக்கமான விடை தருக.

a - இலங்கையில் மிக நீண்ட காலம் நிலைத்திருந்த இராசதானி

b – கலிங்க மாகன் இலங்கை மீது படையெடுத்த ஆண்டு

c – புராதன அனுராதபுர நகரத்தை திட்டமிட்டு உருவாக்கிய மன்னன்

(ii) கம்பளை இராசதானியின் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கிய நூல்கள் நான்கு தருக.

(iii) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் அந்நியராட்சியிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக?

(iv) இரண்டாவது நகராக்கத்தின் போது ஆட்சி மையங்களைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்திய அடிப்படைக் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

**(3+4+5+6=18 புள்ளிகள்)**

**7.** (i) கண்டி இராசதானிக்கு பாதுகாப்பு வழங்கும்

a - நதி ஒன்றினையும்

b - மலைகள் இரண்டினையும் குறிப்பிடுக?

(ii) கீழே தரப்பட்ட கண்டி இராசதானிக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பின்வரும் வரி முறைகளுக்கு பொருத்தமான சொற்களை அடைப்புக்குளிருந்து தெரிந்து எழுதுக?

a - யானை பிடித்தலுக்கான வரி

b - சலவைக்கான வரி

c - நெசவுக்கான வரி

d - போக்குவரத்துக்கான வரி

(ஹெந்த பத்த, மடிகே பத்த, குருவே பத்த, படஹெல பத்த, ரதா பத்த)

(iii) கண்டி இராசதானிக்கால பொருளாதார முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக?

(iv) கண்டி இராச்சியத்தில் முதலாம் விமலதர்மசூரிய மன்னன் ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

**(3+4+5+6=18 புள்ளிகள்)**

## பகுதி – III

**8.** (i) ஐரோப்பிய வரலாற்றுக்குரிய மூன்று காலகட்டங்களையும் குறிப்பிடுக?

(ii) a - மறுமலர்ச்சிக்கால இத்தாலிய எழுத்தளர்கள் இருவரையும்,

b - மத்தியகால இறுதியில் தோற்றம் பெற்ற இங்கிலாந்தின் பல்கலைக்கழகங்கள் இரண்டினையும் குறிப்பிடுக?

(iii) கி.பி 1453ல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டமையால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக?

(iv) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

**(3+4+5+6=18 புள்ளிகள்)**

**9.** (i) ஸ்பானியாவின் ஆதரவுடன் நாடுகாண் பயணத்தை மேற்கொண்ட நாடுகாண் பயணிகள் மூவரைக் குறிப்பிடுக?

(ii) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக சமய சீர்திருத்தம் ஏற்பட்ட காலப்பகுதியில் கிறிஸ்தவ சமயத்தை விமர்சனத்திற்குட்படுத்தியவர்கள் நால்வரைக் குறிப்பிடுக?

(iii) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இலங்கை மீது செல்வாக்கு செலுத்திய விதத்தை **அரசியல், பொருளாதார** துறைகளில் ஏற்படுத்திய மாற்றங்களினூடாக எடுத்துக்காட்டுக?

(iv) ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

**(3+4+5+6=18 புள்ளிகள்)**